# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

*************

மனு எண்: 402/2017/ஊராட்சி

ஆணை எண்: 062/2017

நாள்: 31/03/2017

திரு. A. மதியழகன்,
164, மருதி தெரு, பசுமாத்தூர் கிராமம்,
காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம்.

–மனுதாரர்

1. ஆணையாளர்,
கே.வி. குப்பம் ஒன்றியம்.

2. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்,
பசுமாத்தூர் ஊராட்சி.

3. ஊராட்சி மன்ற செயலாளர்,
பசுமாத்தூர் ஊராட்சி.

–எதிர் மனுதாரர்கள்

## ஆணை

வேலூர் மாவட்டம், பசுமாத்தூர் ஊராட்சியில் வசிக்கும் திரு. A. மதியழகன் என்பவர், அவருடைய 11.03.2017 நாளிட்ட மனுவில் 2011–12 முதல் 2013–14 முடிய உள்ள மூன்று ஆண்டுகளுக்கான பசுமாத்தூர் ஊராட்சி தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிதி இழப்புகளை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டி, அதற்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஊராட்சிகளின் உதவி இயக்குநருக்கு முறையிட்டதாகவும், ஆனால் அதன்பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லையென்றும், ஊராட்சிகளின் உதவி இயக்குநர்

முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற செயலாளர் ஆகியோர்கள் கூட்டாக சதி செய்து, தாங்கள் லாபம் அடையவேண்டும் என்பதற்காக அரசு நிதிக்கு இழப்பு ஏற்படுத்தியும், முறைகேடான ஆவணங்களை தயாரித்தும், அதன்பேரில் பணப்பலன் அடைந்துள்ளனர் என்றும் தெரிவித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017
செயலாளர்.

பெறுநர்
திரு. A. மதியழகன்,
164, மருதி தெரு, பசுமாத்தூர் கிராமம்,
காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம் - 635 803.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.